**ஆயரின்  தவக்கால மடல் 2026**

**„தைரியம்கொள், எழுந்திரு" (மாற்கு 10,49)**

இந்த தவக்காலத்தின் ஆரம்பத்தில் சில சிந்தனைகளையும் தூண்டுதல்களையும் மீண்டும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நாம் கடந்து வந்த புனித ஆண்டில் 'நம்பிக்கை' என்பது குறித்து அதிகம் சிந்தித்துள்ளோம். கிறீஸ்துவிலான நம்பிக்கை, கிறீஸ்தவர்களாகிய எமக்கு, இப் புனித ஆண்டையும் தாண்டி, ஒரு முக்கியமான அடிப்படைத் தேவையாக எமது மரபு வழியில் எழுதப்பட்டுள்ளது

குறிப்பாக மிகுதியான கவலைகள் மற்றும் சவால்களால் சுமையுடன் இருப்போரையும், எமது சமுகத்திலுள்ள கருத்துவேறுபாடுகள் குறித்தும், இவ் உலகிலுள்ள பதட்டங்கள் குறித்தும் சோர்வாகவும் நிச்சயமற்றவராகவும் இருப்போரையும், எம் பணிவாழ்வில் சந்திக்கும்போது நாம் நம்பிக்கையளிப்பவராகவும் உறுதியளிப்பவராகவும் இருக்க விரும்புகிறோம். சில சமயங்களில் விழிப்புணர்வுடன் நோக்கும்பொழுது நம் காலத்தின் சிக்கலானது ஒரு இலகுவான தீர்வைக்காண முடியாதென்பதை உணர்த்துகின்றது.

மேலும் ஒருவேளை இக்காரணங்களால் நாம் மீண்டும் மீண்டும் எமக்குள் ஏக்கம் கொண்டுள்ளோம். நாம் உயர்வடையும் பொருட்டுப் புதிதாக ஆரம்பிக்க, முன்னேற, எமது தனிப்பட்ட வாழ்விலும், எமது திருச்சபையிலும், எமது சமூகத்திலும், வாழ்வின் பல கோணங்களில் புதிய ஆரம்பங்கள் தேவை. இதன் மூலம் நாம் மிகவும் சுதந்திரமாகவும், திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். இவற்றை ஆரம்பிக்க எமக்குத் தைரியம் தேவை.

**"தைரியம்கொள், எழுந்திரு"**

இது வூட்போர்க்கில் (Würzburg) நடைபெறவுள்ள கத்தோலிக்கத்தினத்திற்கான மாற்கு நற்செய்தியிலுள்ள விருது வாக்கியமாகும். பார்வையற்றவராகிய பத்திமேயுவை இயேசு பார்க்கவிரும்பி இப்படி அழைக்கிறார் (மாற்கு  10.49) ஆகவே நற்செய்தி தரும் நம்பிக்கையுடன் நாம் வளர்ச்சி அடைய ஆரம்பிப்போம். கடவுளின் அன்பு தீமையையும் வெறுப்பையும்விட வலிமையானது. மரணத்தைவிட வாழ்வு மேலானது.

தவக்காலம் என்பது எமக்குத் தைரியத்துடன் புதிய ஒரு எழுச்சியான ஆரம்பத்தை மேற்கொள்ளும் பயிற்சியின் காலமாகும். இதை ஆரம்பிப்பதற்கு நாம் முதலில் எம்மை பலவீனப்படுத்தி எமக்கு சுமையாகவிருக்கும் எமது உள்மனத்தின் களைப்புகள், நாம் மறுக்கும் விடயங்கள், எமது பயங்கள், கவலைகள் என்ன என்பதைக் கண்டறிதல் வேண்டும். நான் எந்த விடயத்தில் களைப்படைந்துள்ளேன்?... அதன் காரணம் என்ன?.. எந்தெந்த தீய பழக்கங்கள் என்னை முடக்கியுள்ளன?.. எது என்னை எனக்குள்ளேயே சிறைப்படுத்தியுள்ளது?

தவக்காலத்தில் அமைதி,  பிரார்த்தனை, மற்றும் உரையாடி பகிர்ந்து உதவக்கூடிய நல்ல மனிதர்கள் எனது சூழலில் தேவை. இது ஒரு ஆழமாகப் பின்னோக்கிச் சிந்தித்துப் பார்க்கும் காலம். தினசரி முரண்பாடுகளைத் தவிர்க்கும்படி எமது வாழ்வைச் சோதித்துப் பார்த்து (மீளாய்வுசெய்து) சீரமைக்கும் காலம்.முதலில் எம் வாழ்வின் அழுத்தங்கள் எவை எனத் தெரிந்துகொண்டால் புதிய ஆரம்பத்திற்கான வலிமையை சக்தியை தெரிந்துகொள்ளவும், எமது தனிப்பட்ட பலவீனங்களை இனங்காணவும், மனமாற்றம் பெறவும், பாவமன்னிப்பு எனும் அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ளவும் இது உதவும். முதலில் நாம் எம்முடனும், சகமனிதர்களுடனும் சமரசம் செய்து வாழ முடியாவிடில் எமது வாழ்விலும் எமது சமுகத்தின் வாழ்விலும் எப்படி மாற்றம் கொண்டுவர முடியும்?

இந்த உயிர்ப்பை நோக்கிய மனமாற்றத்தின் காலம் இவற்றை நிறைவேற்றப் போதுமானதென உங்களை அழைக்கிறேன். இன்றைய நற்செய்தி இதையே எமக்கு முழுவதுமாக நினைவுபடுத்துகிறது. இயேசு தனது பகிரங்க வாழ்வில் இறைவார்த்தையை அறிவிக்குமுன் அவர் அமைதியை தேடினார். சோதனையை எதிர்கொண்டார். இதன் மூலம் உறுதி, வலிமை, பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றைப் பெற்று விடாமுயற்சியுடன் திரும்பினார்.

எமது சமகாலத்தவர்க்கு அவர்களது வாழ்வில் எப்படியான மாற்றங்கள் தேவையாயுள்ளான, எவை முக்கியமானவை என்பதுடன் குறிப்பாக எமது திருச்சபைக்கும் எமது சமுகத்திற்கும் எது தேவையானது என்பதையும் கண்டுணர்ந்து, ஒரு புதிய திருப்பத்தைக் காணும்படியான பல சந்தர்பங்களிற்கும் சவால்களிற்கும் முகம் கொடுக்க உங்களை அழைக்கிறேன்.

இந்த ஆண்டில் எங்கள் பங்குகள், பங்குக்குழுக்கள் மற்றும் ஆலயக் குழுக்களிற்கான தேர்தல்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருவர் முறையாக வாக்களிக்கிறார் என்பதைவிட, இது எமது சமுகத்தின் சீரமைப்பு மற்றும் எதிர்காலத்திற்கான மேலான சேவையாகும். இதில் பங்குகொள்பவர் மிகவும் தெளிவுடன் எமது பங்கின் சீரமைப்பிற்காக இணைந்து உதவும் பொறுப்பை ஏற்கிறார்.

எமது பங்கிற்கு மிக முக்கியமான இச் சவாலான முதற்படியை தைரியத்துடன் தேர்வுபெற அனுமதிப்பது, எமது பங்கின் வாழ்விற்கு மிக முக்கியமானதாகும். தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஓர் சமூகஉணர்வுடனான விசுவாசவாழ்வின் சூழல் உருவாகுவதற்கு இந்த வாய்ப்பை பயன்படுத்தி, எதிர்காலத்தில் பங்கின் வளர்ச்சிக்கு இணைந்து உதவ முடியும்.

எமது மேற்றாசனங்கள் அமைந்திருக்கும் பேர்லின் மற்றும் பொமரேனிய நகரங்களின் மாநிலத்தேர்தல்கள் நடைபெறவுள்ளன. கிறிஸ்தவர்களாகிய நாம் இவ் ஜனநாயக தேர்தலில் பொறுப்புடன் பங்குகொண்டு, சிக்கலான சமூதாய சூழலை விளங்கிக்கொண்டு, தனது பொறுப்பிற்கு முகம்கொடுக்கும் ஆன்மிகபலமுள்ள ஒருவரை தேர்தலில் தெரிவுசெய்வது, கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். இந்த அரசியல் பொறுப்பை ஏற்று, எமது சுதந்திர ஜனநாயக அடிப்படை ஒழுங்குகளை நடைமுறைப்படுத்த விரும்புவோருக்கு, நான் நன்றி சொல்கிறேன். இதுவும் ஒரு கிறிஸ்த்தவ பணிக்கான அர்ப்பணிப்பாகும். ஆண்டவரின் குரலுக்குச் செவிசாய்த்து எமது பணியை திருச்சபையிலும்சரி, சமுதாயத்திலும்சரி ஆற்றுவது கிறீஸ்துவின் அழைப்பிற்கு நாம் விடுக்கும் ஒரு தைரியமான பதிலாகும்.

கடவுளின் அழைப்பிற்கு முகம்கொடுப்பது சில சமயம் எமக்குப் பயமானதாயிருக்கலாம். ஆயின் இத்தீர்மானம் ஒரு பெரிய அடையாளமாகும். எமது நம்பிக்கைகளும் வாழ்க்கை முறையும் வேறு வேறாக இருந்தாலும் இம் முடிவு காண்பிக்கும் அடையாளம் முக்கியமானதாகும்.

இதை செய் என்று சொல்வதால் மட்டும் செயல்படுத்த ஆற்றல் கிடைப்பதில்லை. மாறாக எம்மை உற்சாகப்படுத்தும் மனிதர்களும், அவர்களை உற்சாகப்படுத்தும் நாமும் இதற்கு அவசியம். எங்களுக்கு எங்களுடன் பயணித்து எமது துணிச்சலை அதிகரிக்கக்கூடிய சகமனிதர்கள் தேவை. கிறீஸ்த்தவர்களான எமக்கு கிறீஸ்த்து எம்முடன் இருக்கிறார் என்று தெரியும். எம்மில் கிறீஸ்த்து உள்ளார். எமக்குத் தைரியம் தந்து எம்முடன் சேர்ந்து பயணிக்கிறார். இயேசு இதை அவரது வாழ்வில் எப்போதும் நிருபித்துள்ளார். அவர் எப்போதும் தொடர்ந்து விடாமுயற்சியுடன் மீண்டும் மீண்டும் புதிதாகத் தொடங்கி, எம்மையும்

அவரைப்போல் துணிச்சலுடன் செயலாற்ற அழைக்கிறார். இது எமது தகுதி குறித்த அதீத நம்பிக்கை அல்ல மாறாக, இறைவனில் நாம் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையேயாகும். எமது பலவீனங்களுடனும் எமது எல்லைகளுடனும், சிலசமயங்களில் நாம் எதிர்கொண்ட ஏமாற்றங்களுடனும் ஆண்டவரையும் எமக்கு அளிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் நம்பவேண்டும். எப்போதும் துணிச்சலுடன் ஒருபுதிய  ஆரம்பத்தை முன்னெடுப்போம்.

சோர்வடைய ஆயிரக்கணக்கான காரணங்கள் உள்ளன. ஆனால் நாம் நமது விசுவாசத்துடன் உயிர்ப்பு விழாவை நோக்கிச் செல்கிறோம். இந்த வகையில்  நாம் எல்லாவிதமான ஊக்கமின்மையையும், மந்தநிலையையும், எல்லா விதமான பணிமறுப்பையும் கடந்து செல்லும் வெற்றி கொள்ளும் பாதையில் பயணிக்கிறோம். நாம் உயிர்த்தெழுந்த கிறீஸ்துவுடன் சென்றுகொண்டிருக்கின்றோம். அவரே எமது தொலைநோக்கு, நம்பிக்கை, எமது மீட்பு. அவர் எமக்குத் துணிவு தருபவர். அவரே எங்கள் துணிவு.

இந்த மனஉறுதியுடன் எம்மை நாம் நம்பி, துணிச்சலான கிறீஸ்தவர்களைக் கொண்ட, துணிச்சலான திருச்சபையாவோம். உயிர்ப்பு விழாவை நோக்கிப் பயணிக்கையில் இதை நான் உங்களுக்கும் எம் அனைவருக்கும் விரும்புகிறேன்.

உங்களை எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன், தூய ஆவியார் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஹைனர் கொஹ் (Heiner Koch)

பேராயர் பேர்லின்